

# திறவுகோல்

2056

ஆவணி

மாத இதழ்

வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# வட அமெரிக்க தமிழ்ச்சங்க மாநாட்டில் பன்மை வெளி புத்தக அரங்கம்



வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FeTNA) 38 ஆம் ஆண்டு மாநாடு, உலகத் தமிழர்களின் பெருங்கூடலாக, வட கரோலினாவின் இராலே நகரில் சூலை 3, 4 -5 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் கனடாவில் பரவியுள்ள 77 தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பே FeTNA என்கிற வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை. கிட்டத்தட்ட ரூ.10 கோடி செலவில் நடத்தப்படும் இம் மாநாட்டிற்கு வட அமெரிக்கா முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொள்வார்கள். இதில் தமிழ் நாட்டில் இருந்து பல ஆளுமைகள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்படுவார்கள்.

இவ்வாண்டு குறிப்பாக, இம்மாநாட்டில் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் ஐயா பெ. மணியரசன், புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர் திரு. மன்னர் மன்னன் மற்றும் சொல்லியல் ஆய்வாளர் தக்கார் ம.சோ. விக்டர் போன்ற ஆளுமைகள் சிறப்பு விருந்தினர்களாகக் அழைக்கப்பட்டிருந்தது, வட அமெரிக்கத் தமிழர்கள் பலரை முதல்முறையாக இம்மாநாட்டிற்கு ஈர்த்தது. இம் மாநாட்டில், பன்மைவெளி பதிப்பகத்தின் நூல் அரங்கம் அமைக்கப்பட்டது ஒரு தனிச் சிறப்பாகும். இம்மாநாட்டில் பங்கேற்ற பலர் அரிய தமிழ் நூல்களை வாங்கிச் செல்ல வாய்ப்பாக பன்மைவெளி அரங்கு அமைந்தது.

பன்மைவெளி வெளியீடுகளில் திரு. பெ. மணியரசன், திரு. கி. வெங்கடராமன், திரு. சு. அருணபாரதி, திரு. கவிபாஸ்கர், புலவர் செ. இராசு, பாவலர் முழுநிலவன், பாவலர் இலரா.

மோகன் உள்ளிட்டோரின் நூல்கள், செம்மைப் பதிப்பகத்தின் திரு. ம. செந்தமிழன், திருமதி. காந்திமதி ஆகியோரின் நூல்கள், பயிற்று பதிப்பகத்தின் திரு. இரா. மன்னர் மன்னன் நூல்கள், அறிஞர் குணா மற்றும் தக்கார் ம.சோ. விக்டர் ஆகியோரது நூல்கள் என மொத்தம் 140க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கா வாழ் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் கோபிநாதன், கணேசன், மனோகர், அகத்தாய்வன் இந்நூலரங்கிற்கான முன்னேற்பாடுகளை செய்தனர்.

நூல்கள் அனைத்தும் பல்வேறு பகுதிகளி லிருந்து சென்னைக்கு வரவழைத்து அங்கிருந்து இராலே நகருக்கு குறுகிய காலத்தில் வானூர்தி வழியாக அனுப்பும் பணியினை பன்மைவெளி வெளியீட்டின் பொறுப்பாளர் திரு. வெற்றித்தமிழன் ஒருங்கிணைத்தார்.



இந் நூலரங்கில் நூல்களை காட்சிபடுத்தும் நூலடுக்கினை நியூயார்க் வாழ் தமிழ்க் குடும்பத்தினர் திரு. சுதன், திருமதி. கேமா சுதன், நந்தனா, சஞ்சனா, திரு. தங்கதுரை, சங்கீதா, மீனாட்சி, அகத்தாய்வான், சரண்யா, மகிழ், அகரன் ஆகியோர் மகிழ்வான கூட்டுப் பணியாக ஓர் ஞாயிற்றுக் கிழமையில் செய்தனர். இதனை 650 மைல்கள் நியூயோர்க்கிலிருந்து இராலே நகருக்கு 10 மணிநேர தரைவழிப் பயணத்தின் வழியாக அகத்தாய்வன் குடும்பத்தினர் எடுத்து வந்தனர். நூல்களின் எண்ணிக்கை மற்றும் செலவினங்களைத் துல்லியமாக கணக்கிட்டு, பதிவில் வைக்கும் பணியை திரு. கோபிநாதன் அவர்கள் தொடக்கம் முதல் இறுதிவரை நேர்த்தியாக செய்து வந்தார்.

நூல் அரங்கில் விற்பனைப் பணியை தன்னார்வலர்களாக மேற்கொள்ள இரலேவிலிருந்து திரு. பாலமுருகன் ராமதாஸ் அவர்களும் டெக்சாஸிலிருந்து திரு. மதுசூதனன் கனகசபை, எழுத்தாளர் மீ. மணிகண்டன், திரு.சரண் வேலுச்சாமி மற்றும் மணிமாறன் சுப்பிரமணியன் ஆகியோர் ஆயிரக்கணக்கான மைல்கள் வான்வழி பயணித்து வந்திருந்தனர்.

இரேலேவிருந்து வந்திருந்த பள்ளி மாணவன் ஹர்சவர்த்தன் பாலமுருகன் புத்தக

விற்பனைக்கு பெரிதும் ஆர்வத்துடன் உதவினார்.

அனைத்து நூல்களும் பாதுகாப்பாக வந்து சேர திரு. பாலமுருகன் ராமதாஸ், திரு. மகேஷ் பன்னீர்செல்வம், திரு.மணிகண்ட பிரபு நாராயணன், முனைவர் சக்திவேல் கார்த்திகேயன், மிதுன் காந்தி, மோகன் ரமணி ஆகியோர் பெரும் உதவியாக இருந்தனர்.



மாநாட்டிற்கு வந்த தமிழர்கள் நூல் அரங்கிற்கு தொடர்ச்சியாக வந்து பார்வையிட்டு நூல்களை வாங்கிச் சென்றனர். தமிழ்த்தேசியத் தளத்தின் பன்முகமான நூல்கள் அனைத்தும் தமிழர்களிடம் பெரும் ஆதரவை பெற்றிருந்தது. அறிஞர் குணா அவர்கள் எழுதிய 'திராவிடத்தால் வீழ்த்தோம் நூல் முதலில் விற்றுத் தீர்ந்தது.

பள்ளி மாணவி மகிழ் அகத்தாய்வன் நடத்திய "30 நொடிகளில் எத்தனை தமிழ்ச் சொற்கள்" படிப்புப் போட்டி தமிழர்களை மிகவும் கவர்ந்திருந்தது. தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் திரு. பழ. செல்வகுமார் இப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறுவர்கள் முதல் பெரியோர் வரை இப்போட்டியில் கலந்து கொண்டு தங்கள் தமிழ் படிப்பு வேகத்தை சோதித்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

ஐயா பெ. மணியரசன், திரு.மன்னர் மன்னன், தக்கார் ம.சோ. விக்டர் ஆகியோர் அரங்கிற்கு வரும் நேரங்களில் தமிழர்கள் கூடுதல் எண்ணிக்கையில் வந்து அவர்களின் நூல்களை வாங்கி கையொப்பம் பெற்று, புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

தமிழ்த்தேசிய ஆளுமைகளை அழைத்து வர ஏற்பாடு செய்திருந்த வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் பேரவை மேனாள் தலைவர் முனைவர். திரு. தணிகுமார் சேரன் மற்றும் உலகத் தமிழ் அமைப்பின் மேனாள் தலைவர் முனைவர் திரு.தேவ் ஐயா ஆகியோர் நூல் அரங்கிற்கு வந்து சிறப்பு செய்தார்கள். திரு. சங்கத்தமிழன் தனது வலையொளியில் நூலரங்கை சிறப்பாக விவரித்தது பெருவாரியான உலகத் தமிழர்களுக்கு சென்று சேர்த்தது.

மாநாட்டில் பங்கேற்க சிறப்பு விருந்தினராக வந்த இயக்குநர் திரு. சீனுராமசாமி அவர்கள் தான் எழுதிய நூல்களை கொடுத்து காட்சிப் படுத்தியிருந்தார்.

அமெரிக்க வாழ் உள்ளூர் எழுத்தாளர் மீ.மணிகண்டன் அவர்கள் எழுதிய புத்தகங்களும்

விற்பனைக்கு வைக்கப்படன.




நூலரங்கை பார்வையிட்ட அமெரிக்க சட்ட வல்லுநர் மேரி கென்னடி அவர்களுக்கு "கீழடியிலிருந்து சிந்துவெளி வரை" நூல் பரிசாக வழங்கினோம். மலேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், நக்கீரன் திரு. கோபால், சின்னத்திரை திரு. முத்துக்குமரன், ஈழத்து திரைப்பட இயக்குநர் திரு. இரஞ்சித் சோசப், நார்வே எழுத்தாளர் கவிதா இலட்சுமி, உலகத் தமிழ் அமைப்பின் திரு. இரவிக்குமார், திரு. அரங்கநாதன், தமிழர் ஆய்வுக்கூடத்தின் திரு. இரத்தீசு திரு. அருண்குமார், நியூசெர்சி தமிழர் பேரவையின் திரு. இராசா இளங்கோவன், அட்லாண்டா தமிழர் பேரவையின் திரு. சங்கர், சோழர் ஊடகத்தின் திரு. அர்சுன், மின்னசோட்டா தமிழ்ச் சங்கத்தின் திரு. சுந்தரமூர்த்தி என பலரும் அரங்கினை பார்வையிட்டு நூல்கள் பெற்றனர்.

மாநாடு முடிந்தவுடன் ஐயா பெ. மணியரசன், திரு.மன்னர் மன்னன் ஆகியோர் அடுத்தடுத்து கலந்து கொள்ளவிருக்கும் நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்களான செயின்ட் லூயிசு திரு. பாண்டியன், நியூசெர்சி திரு. இராசா இளங் கோவன், பெனிசில்வேனியா திரு. வாசு, திரு. சரவணன், வெர்சீனியா திரு. இரவிக்குமார், கலிபோர்னியா திரு. மஞ்சுநாதன், டெக்சாசு திரு. குமார் நாகராசன் மற்றும் திரு. மதுசூதனன், அட்லாண்டா திரு. சங்கர், திரு.சந்திரா மற்றும் திரு.பாலா, புளோரிடா திரு. அரங்கநாதன், இராலே திரு. பாலமுருகன், முனைவர் திரு. கார்த்திகேயன், முனைவர் திரு. இளங்கோ, திரு. இரவி ஆகியோர் மீதமிருந்த நூல்களை தங்கள் பகுதிகளில் விற்பனை செய்ய பெற்றுச்சென்றனர்.

வட அமெரிக்க மற்றும் தமிழ்நாட்டுத் தமிழர்களின் கூட்டு முயற்சியால் மிகக் குறுகிய நாட்களில் பன்மைவெளி நூலரங்கம் அமைக்கப்பெற்று அமெரிக்க வாழ் தமிழர்களுக்கு தமிழ் நூல்கள் வெற்றிகரமாக கொண்டு சேர்க்கப்பட்டது நிறைவான பெருமகிழ்வான நிகழ்வாக இருந்தது.

—

அகத்தாய்வான்,
சிரகூஸ், நியூ யார்க்,
அமெரிக்கா.

# அழகிய அன்றாடம்

மறைந்த சூரியன் மீண்டும்
முயன்று உதிக்கிறது!
நம்பிக்கையுடன் காத்திருந்த
மலரொன்று சிரிக்கிறது!

அதனொளிப்பட்டு
மூடியிருந்த இமையது
மெல்ல விரிகிறது!
ஓய்வெடுத்த உடலது
உழைக்கத் துவங்குகிறது!

இரைதேடி பறவை
பறக்க தொடங்குகிறது!
இனம்விட்டு பிரியாமல்
பசுவொன்று மேய்கிறது!

சமமற்ற பாதையிலும்
எறும்பொன்று பருக்கையை
எடுத்து செல்கிறது!
ஆடும் இலையும் ஓடும் நீரும்
அதனதன் வேலையை
சரியாக செய்கிறது!

சுக துக்கங்களைச்
சுமந்துகொண்டு
காலச்சக்கரத்தைச் சரியாக சுழற்றுகிறது
அழகிய அன்றாடம்!

—

பாக்யபாரதி,
தருமபுரி.
அலைப்பேசி: 6382441406

# இனிய பாதை

என்னை நிராகரித்தவுடன்
உன் புதிய வாழ்வின்
இனிய பாதைகள்
சொர்க்கத்தில் சேர்க்கலாம்
நிச்சயமாக நீயற்ற என்
பயணத்தின் முடிவு
நரகத்தின் பள்ளத்தாக்கில்
இருட்செறிந்த புதைகுழி
உன்னை நினைத்து
மௌனமாய் சிதைகிறேன்
என் தனிமையின் வானெங்கும்
உன் நினைவுகள்
உறைந்த மேகங்கள்.

## தேவை

உன்னிடம்
நான் வேண்டும்
என் வாழ்விற்கான
அத்தியாவசிய தேவை
என் மீதான
உன் பரிசுத்த
பேரன்பினைத் தவிர
வேறொன்றுமில்லை

## கர்வம்

உயிரென்று உன்னை
ஏற்றுக்கொண்ட பிறகு
நான் யாரையும்

ஏறெடுத்தும் பார்ப்பதில்லை
உன்னுடைய நான்
உன்னுடையவனாகவே
இருந்து இறந்து போவதில்
அவ்வளவு கர்வம் எனக்கு!

## அலட்சியம்

மகாராணியுன் தலைமீது
வைரக் கீரிடமாக மின்னி
பேரானந்தம் கொண்டிருந்தேன்
ஆணவமாய் முன்னாளில்
புதிதாக வந்து
இதயம் கவர்ந்தவர்களுக்காக
என்னை எடுத்தெறிந்து
வீதியில் வீசுகிறாய்
உந்தன் எல்லா
அலட்சியத்திற்குப்பிறகும்
உன் மனம்கவர்ந்த
கரடி பொம்மையாகவோ
காதின் ஜிமிக்கியாகவோ
செல்ல நாய்குட்டியாகவோ
திறன்பேசியாகவே
உடனிருந்து மகிழவாவது
வரம் அளித்தருள்வாயா நீ!

## மாமிசப் பட்சி

நான் நினைக்கும் பொழுதில்
உன்னுடன் பேசி
இனிக்க இயலவில்லை
தொடர்பு கொள்ளும் பொழுதெல்லாம்
வேறொரு எண்ணுடன்
கதைத்து இருக்கிறாய்
மாமிசப் பட்சிகளால்
கொத்திக் குதறிய
துயர் மிகுந்த நெஞ்சோடு
உன்னையே நினைத்து
இறப்பை எதிர்நோக்குகிறேன்
தொடர்ந்து வரும்
மற்றுமொரு அழைப்போடு
பேரன்பினால் குலாவி
மொழிகள் பூத்துக்
குழைந்துகொண்டிருக்கிறாய்
மென்மேலும் நீ
புதிதாய் விடிந்த
இன்னுமொரு விடியல்
நரகத்தில் தள்ளி
தாழிடுகிறது என்னை!

## விழாக்கோலம்

நீ உடனிருந்து
கா(வ/த)ல் செய்கிறாய்
மரணம் வெறுப்புடன்
என்னை ஒதுங்கிச் செல்கிறது
நான் திறனுடன்
உன் விழி வாழ்கிறேன்
பூக்களின் வண்ணம்
என் அறிவைப் பிழிந்து
வானவில் தீட்டுகிறது
தேய்ந்து வளரும்
வெண்ணிலவின் உடலோடு
மின்மினியின் துகள்களாய்
வானில் மினிக்கிடும்
நட்சத்திரங்களில்
நிச்சயம் இருக்கலாம்
உன் குழந்தைமை புன்னகை
வெளியெங்கும் சுற்றிடும்
மென்காற்றின் இதத்தில்
உன் பேரன்பின் தழுவல்களால்
பைத்தியமாய் காதல்வெடித்துப்

பூப்பூவாய் சிதறிச்
செழிக்கிறேன் நான்
இதயம் கொய்யும் பேழகினால்
விழாக்கோலம் நிரப்பி
ஆச்சர்யங்களால் திக்குமுக்காட
மயில்தோகை விரிக்கிறாய் நீ!

## பேரரசி

என்னுடைய மிகச்சிறிய
உலகத்தில்
என்னை மிகப்பெரியதாய்
ஆளும்
அன்பிற்கினிய பேரரசி நீ!

## நறுஞ்சுவை

நீயென்னை
வெறுத்துக் கொண்டிருக்கிறாய்
நான்னை உயிராய்
காதலித்துக் கொண்டிருக்கிறேன்
கடலின் குணம்
உப்பென்றாலும்
மழையின் மனம்
நறுஞ்சுவை தானே
சருகுகள் ஆகி
இலைகள் பிரிந்தாலும்
கிளைகளில் தழும்புகள்
என்றும் நீங்காது
நீயிருந்த இதயத்தில்
இருளில்லை
பெருங்காட்டை எரிக்கும்
தனல் மீதம் உள்ளது .

## பரவசம்

இரவின் நரகத்தில்
நீ நிராகரித்த நான்
கண்ணீரின் திராவகம் மூழ்கி
உடல் பொருள் ஆவி
பொசுங்கிக் கொண்டிருக்கிறேன்
குவளை தேநீரோடு
யாதொன்றும் நிகழாத
இனிய பரவசத்தோடே
புதிய நாளை
மிக இயல்பாய்
நலமுடன் துவங்குகிறாய் நீ
முற்றிலும் மனம் நொறுங்கிப்
படுக்கை அறையின்
மின்விசிறியில்
தூக்கிட்டுத் தொங்குகிறது
பாவம் என் பரிதாபக் காதல்.

## மடத்தனம்

முப்பொழுதும்
நானுனை நினைத்து
மெழுகாய்
உருகிக் கொண்டிருப்பதைப் போலவே
நீயும் எனை நினைத்துக்
நேயத்தால்
மருகிக் கொண்டிருப்பாயென
பைத்தியம்போல் எண்ணுவது
மடத்தனமா ?
மதித்தனமா? - என்பதை
எதிர்பாராமல் நீயனுப்பும்
குறுஞ்செய்தியோ ! -அல்லது
குரல் அழைப்போ!
மெய்ப்பித்துவிடும்
இன்னும் சற்று நேரத்தில்.

—



பொன். தெய்வா,
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

# ஊர் புறக்களின் நாயகி

உனது கனிந்த
கன்னங்களைத் தான்
இங்கே படித்துக்
கொண்டிருக்கிறேன்

உனது இமைகளின்
அழுத்தங்களைத் திறந்தே
எனக்கான சொற்களை
எடுத்துக் கொள்கிறேன்

உன் நடைப்பயிற்சி
நேரங்களை
கூடு கட்டியே சுவாசிக்கும்
எனது ஏற்பாடு

மௌன கீதங்களை
மடை மாற்றும்
உன் கூந்தல் குலாவலில்
தொலைந்திடவே இக் காத்திருப்பு

கொலுசொலி மீட்டித் திரியும்
உன் சிற்ப அசைவுகளை
பின் தொடரும்
என் கற்பனைப் புரவி

தேன் கமழும் நீயொரு
யௌவனம் எனும்
இந்தப் பாடுபொருள்
றோஸ் நிற சிறகடிப்பு

மெச்சித் திரியும் ஊர் புறாக்களின்
நாயகி அல்லவா நீ
ஊதா நிற வானமாய்
தூது வந்திருக்கிறேன்

## அன்றியும் கேட்க ஒன்று

கத்திகள் இரண்டும்
கவிதைகள் வரைந்தால்
காதலுக்கு எப்படி வாய்ப்பு

பெருங் காற்றாடி சுழற்சியில்
இடைவெளிகள்
மாயை

இதயங்கள் இணைய
எதுகை மோனை
உதவாது

முக்திக்கும்
யுக்திக்குமிடையே
முத்தத்திற்கு வேலை இருக்காது

அவரவர் வானம் அவரவருக்கு
எதிர்ப்பட்ட பயணம் நிம்மதி
அவ்வளவே

அன்றியும் கேட்க ஒன்று
இது எப்படி ஆரம்பித்தது
எப்படி முடிந்தது...!

## மாண்புமிகு மனிதன்

தினம் தினம்
கத்தி சாகும் குயிலை
இசைக்கிறது என்கிறான்

நுரை தள்ள நகரும்
இரும்பு பெட்டியை
சிக்கு புக்கென ரசிக்கிறான்
கல்லும் மண்ணும் கால சுமை
கொண்ட நிலவை
சும்மா சும்மா காதலிக்கிறான்
நிஜமாகவே குளிருக்கு
நடுங்குகிறது தான்
மயில் தோகையில் மாடர்ன் ஆர்ட்
காண்கிறான்
வந்தும் வராமல் செத்தொழியும்
வானவில்லில்
துப்பட்டா செய்து பார்க்கிறான்
சுலபமாய் மனிதனாகி விட்டதில்
வந்த வினை
மாண்புமிகு சேர்த்து
மண்டை பெருக்குகிறான்

—

*கவிஜி*

---

# தனிமை ஓர் நரகம்

எனக்குப் பிடித்தவர்களை விட்டு
தூரமாக வந்தேன்..
என் தேவைகளுக்கு விடை தேடி…

என்னைப் பிடித்தவர்கள் எல்லாம்
தூரமாக போய்விட்டார்கள்!

இதற்கு விடை தேடினாலும் கிடைக்காத
கேள்விக்குறியாக நான் இங்கே
தனிமையில் அழுது தீர்க்கின்றேன்!

— *பொன்மணி தர்மா வள்ளுவன், BE.,*
சிங்கப்பூர்.
(பரவாக்கோட்டை)



**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**



# அதற்குப்பின்

கடுஞ்சொல்லுக்கும்
வசைமொழிக்கும்
அமைதியும்

அவமானத்துக்கும்
கேலிக்கும்
நிதானமும்

பிடிவாதத்துக்கும்
அடத்துக்கும்
விட்டுக்கொடுத்தலும்

உண்மை
புரிய வைக்க
புரிந்து கொள்ள

சில காலம்
பொறுமை காக்கலாம்

அதற்குப்பின்
விட்டு ஒதுங்குவது
இரு தரப்புக்கும்
நல்லத

## அது மட்டுமில்லை

எதிர்பார்த்தது
நடக்காத போது

காட்டுகின்ற
கோப உடல் மொழியும்
பேசுகின்ற
கடுமையான
உதட்டு வார்த்தைகளும்
அதனால் மட்டும் இல்லை

அந்த கணத்து
மன நிலை
முன்னர் நடந்த
பிடிக்காதவைகள்
கொண்டிருக்கின்ற
தவறான புரிதல்
பிறரால்
தூண்டப்பட்டவைகள்
இப்படியே தான்
நடக்கும்
என்ற பயம் கலந்த
அவநம்பிக்கையும்
சேர்ந்தது தான்

## அப்ப இல்லாததாலே..

கல்லூரி படிக்கையில்
உடல் சரியில்லாததால்
பத்து பதினைந்து
நாட்கள்
விடுமுறை எடுத்து

புத்தகம் இருந்தாலும்
பேராசிரியர் வகுப்பு
எடுக்கும் பொழுதுகளில்
குறிப்பு எழுதுவது தான்
பாடம் புரியும் என்பதால்

கொஞ்சமே
சரியானவுடன்
சகாவின் நோட்டை
வாங்க அவர் இல்லம்
நோக்கிய ஓட்டம்

ஏதோ ஒன்றை
இழந்ததை போன்ற
பதட்டத்துடன்
இன்றும் நினைவில்...

இன்று போல்
அறிந்து கொள்ளவும்
புரிந்து கொள்ளவும்
பல வசதிகள்
கூகுள் ஆசானும்
இணைய வசதியும்
இல்லாததால்...

## அவைகள் அப்படித்தான்...

பிரபலமானவரையும்
செல்வாக்கும்
செல்வமும்
அதிகாரமும்
பதவியும்
உள்ளவர்களும்

பேசும்
சாதாரண வார்த்தையும்
கொண்டாடப்படுவதா

பெரும் தவறுக்கும்
ஊர் உலகத்திலே
நடக்காததா
என நியாயப்படுத்துவதா

மனதை துளைக்கும்
கடுஞ்சொற்களுக்கும்
ஏதோ கோபத்திலே
பேசியிருப்பார்
என யோசித்து

காரணம் சொல்வதா

என்றோ
எப்போதோ
செய்த ஒரே
ஒரு நல்ல காரியத்துக்கு
அவரைப்போல
உண்டா
என காலங்காலமாய்
பாராட்டப்படுவதா

பிறரால்
சொல்லிக்கொடுக்கப்பட்டது
அப்படியே
சொல்லி
செய்ததமைக்கு
இவரைப்போல
திறமை உடையவர்
உண்டா
என வானாளவா
புகழுவதா

என்றால்
அவைகள்
அப்படித்தான்
யதார்த்த உலகத்தில்...

## நீங்க மட்டும்...

தெரிந்து கொள்ளவும்
அறிந்து கொள்ளவும்
முடிவுகள் எடுக்கவும்
தகவல்களும்
விபரங்களும்
கேட்கப்பட
பிற பணி ஒதுக்கி

காலம் கொடுத்து
கொடுக்கப்பட்ட பின்
பார்த்தீர்களா
என கேட்க
மிகச்சாதாரணமாய்
எப்ப
பார்க்கலியே
என பதில்

ஆனா
நீங்க மட்டும்
தயாரான
விஷயங்களில்
கேள்விகள் கேட்டு

வேறு அவசிய அவசர பணியால்
அதற்கான நேரம்
கொடுக்காததால்
பதில்கள்
தெரியாமால்
தடுமாற்றங்களும்
நொண்டியத்தலும்
நிகழ
என்ன தான்
செய்கிறாய்
என்றால்
என்ன சொல்ல?...

## முன்பு எல்லாம்...

பள்ளிக்காலங்களில்
கல்லூரி படிக்கையில்
செய்தொழிலில்
சேர்ந்த ஆரம்பகாலங்களில்
பண்டிகைகள்
என்றால்
ஆடை பொருள் சேர்க்கை
சிறப்பு உணவு
திரைப்படம்
சகாக்களோடு
அரட்டை
ஊர் சுற்றல்
தன் சந்தோஷத்தை பற்றிய
நினைப்போடு மட்டும்

இப்போது எனில்
தனக்கானவர்களை
மகிழ்ச்சிப்படுத்துதல்
எளியோருக்கு முடிந்த உதவி

வாழ்க்கை பயணத்தில்
சுற்றியுள்ளதை
உற்று நோக்குதல்
வாசித்தல்
கேட்டல்
பார்த்தல்
விளைவாய்
யோசித்தல்
அதனால் கிடைத்த
அனுபவத்தால்

இதற்கு பொருளாதாரம்
ஒத்துழைக்கிறது
என்பது ஒரு காரணம்

## வழக்கம் போல்...

எட்டு மணி நேர செய்பணி
முடிந்தவுடன் இல்லம் திரும்பல்

விருப்ப பொழுதுபோக்கு
ரசிக்கையில் வேறு சிந்தனை
வரும் தொல்லையின்மை

உறக்கத்துக்கு செல்கையில்
நாளைய பற்றி எண்ணமின்மை

நமக்கே நமக்கான
நாளாய் வார விடுமுறை

என வழக்கம் போல்
கனவாய்
மூளையின் ஞாபக அடுக்குகளில்
எதிர்பார்ப்புகள் வலுவாய் ஆக்ரமித்தால்

## நீயா நானா?

மனிதனுக்கு நான் தான் முக்கியம் என
உழைப்பு
முயற்சி
நம்பிக்கை
போன்றவை
வரிசைகட்டி நிற்க

யதார்த்தமாக
பார்த்தால்
நான் தான் முக்கியம்
என பணம் சொல்ல

இறுதியாய்
மனிதனின்
மனம் தீர்ப்பு சொன்னது
பணம் அவசியம் எனினும்
அதை ஈட்டுவதற்க்கும்
செலவழிக்கவும்
சேமிக்கவும்
தேவை
புத்தியே என்று...

## சொல்வதால்

வெளிப்படுத்தாத
திறமை

முதல்படுத்திக்கொள்ளா
செல்வாக்கு

பேசப்படா
சொல்லாற்றல்

எழுதப்படா
படைப்பாற்றல்

நேரத்தே காட்டா
மனப்பக்குவம்

சமயத்தில் சொல்லப்படா
மாற்று யோசனையால்

என்ன பயன்
என்னிடம் இருக்கிறது
என்று சொல்வதால் மட்டும்

## நீ இல்லையென்றால்...

காற்றில் ஆக்ஸிஜன்
இல்லையெனில்

மனிதனுக்கு உயிர் இல்லை

உள்ளத்தில் பொறாமை இல்லையெனில்
நிம்மதிக்கு குறைவில்லை

சாதிக்க வேண்டும் என்ற.இலட்சியம்
இல்லையெனில்
முன்னேற்றம் சாத்தியம் இல்லை

குறை சொல்லிக்கொண்டே இருக்க
எண்ணம் இல்லேயெனில்
பாராட்டும் குணத்திற்கு
பஞ்சம் இல்லை....

## பொறாமை

சுழலும் மின்விசிறி
அசையும் நாட்காட்டி
நேரக்கணக்கை காட்டும் கடிகாரம்
போர்த்தாத உடல் பகுதி நோக்கி
கொசுக்கள்

என அஃறிணையும் ஐந்து அறிவு ஜீவனும்
இயங்க

கவிதைக்கான வார்த்தை தேடி
சிந்தனை ஆரம்பித்த அதே இடத்தில்
மணிக்கணக்கில்
படுக்கையில் நான்...

## சம்பிரதாய சொற்கள்

ஒரு பணி செய்யும் போது எதிர் மனிதர்
குறுக்கிட்டால்
'ஒரு நிமிடம்'

நட்பும் உறவும் சந்தித்தால்
நல விசாரிப்புக்கு பின்
'அப்புறம்'

தாய் குலங்கள்
குழந்தைகள் பற்றி சொல்லும் போது
'சாப்பிடாமால் ஒரே அடம்'...

## தரையில் இறங்கும் மனம்...

அடிக்கடி இலக்கிய கூட்டங்கள்

மனிதர்களை
படிக்க நெடிய பயணம்

வீடே குட்டி நூலகமயாய்
புத்தகக்கூட்டம்

அனு தினமும் புதிய விஷயங்கள் அறிய
நேர ஒதுக்கிடு

இப்படி மேலே பறந்து விட்டு
அலாரம் நினைவூட்டிய
வயிற்று பிழைப்புக்காய்
தயாரானது மனம்...

## இரட்டை பார்வைகள்...

பலம்
அறிந்து

பலவீனம்
கழித்து

முடிக்க வேண்டிய
அவசியம் உணர்ந்து

காலக்கெடு
கணக்கில் கொண்டு

எதிர்பாராதவை
யூகித்து

குழுவை
ஊக்கப்படுத்தி

திறமை
வளர்த்து

அறியாததை
அறிந்தவர் மூலம் அறிந்து

இலக்கை நோக்கிய
செயலாக்கப்பயணத்தில்

இவ்வளவு ஏற்பாடுகளால்
வெற்றி தான்
என்ற நம்பிக்கை ஒரு புறம்

இதற்கு
எதிர் வினையாய்

சம்பந்தப்பட்டவர்களால்
எப்படி பார்க்கப்படும்

பாராட்டு கிடைக்குமா
ஊக்கம் கொடுக்கப்படுமா

விமர்சனங்கள்
வீசப்படுமா

ஏளனம்
பரிசாகுமா

என பதட்ட உணர்வுகள்
மறு புறம்

தவிர்க்க முடியாதவையாய்

## தனித்திருக்கையில்

இழந்த கதை
வருத்தத்தையும்

நாளையவை
பற்றி பயத்தையும்
ஒதுக்கி

இழப்பின்
காரணத்தை
அறிந்து சரி செய்யவும்

நாளையவை
நமக்கானது
என்ற நம்பிக்கைக்கும்

நேற்றையவை
மகிழ்வானது
என்ற ஏக்கம் விடுத்து

இன்றையவையும்
பின்னாளில்
நினைக்க வைக்க
முடியும் என
இலக்காக்கி
கொள்ளவும்

பயன்படுத்தினால்
அர்த்தமுள்ளது

இதனால் தானோ
தனிமையில்
சிந்தனையில் கவனம்
என்று சொல்லப்படுகிறது.

## அத்தனை வார்த்தை விளையாட்டுகளிலும்

நீங்க கேட்டதை
செய்யணும் தான்
நினைத்தேன்
'அப்பப்பார்த்து'

உங்களை சந்திக்கத்தான்
கிளம்பினேன்
'ஆனா'

சொல்றதை கேட்க
விருப்பம் தான்
'இப்பன்னு பார்த்து'

உங்களோடு
கொஞ்சம் செலவிட வேண்டும் தான்
ஆசை
'முக்கியமாய்'

அத்தனை வார்த்தை
விளையாட்டுகளிலும்
உள்ளது
ஒன்றே ஒன்று தான்
'இயலாது.

கடிகாரம் பேசுகிறது

மனிதர்களே
நாள் முழுவதும்
என்னைப்போல்
இயங்குங்கள்

ஆனால்
குறுகிய வட்டத்தில்
என்னைப்போல் சுற்றாதீர்கள்...

## இப்ப மாதிரி...

நீண்ட இடைவெளிக்குப்பின்னான
தோழமையின்
சந்திப்பில்
அரட்டையை...

மணவிழாவில்
உறவுகளை பார்க்கையில்
சேர்த்து வைத்திருந்த
நிகழ்வுகளை பகிர்ந்த
உவகையை...

இழப்பும்,தோல்வியும்
வேதனையும் பணக்கஷ்டமும்
தொடர்கதையான
உண்மையை...

கடந்தவைகளிலிருந்து
எதிர்மனிதரிடம்
விவரிக்கையில்

'இப்ப மாதிரி இருக்கு

## நீங்க சொன்னது எல்லாம்...

ஒரு தோல்வியை
ஒரு ஏமாற்றத்தை
ஒரு இழப்பை

வைத்து
அனைத்தும் இழந்ததாயும்

எதிர் மனிதரின்
ஒரு தவறு
ஒரு செயல்படாமை
ஒரு காலதாமதம்
ஒரு மறுப்பு
ஒரு கண்டுக்கொள்ளாமை
ஒரு வசைபாடல்
வைத்து
சரியில்லை
என எண்ணம்
கொள்ளாதே
என புத்தி சொன்னது எல்லாம்
சாதாரண நிலையில்
சரியாய் தான்
எடுத்துக்கொள்ள முடிகிறது

ஆனால்
அவை நிகழும்
கணத்தில்
முன்னதில்
அனைத்தும்
போனதாயும்
பின்னதில்
அவர் சரியில்லை
என்ற எண்ணம் தான்
கொள்கிறது

## காக்கையின் செய்தி...

இழப்பின் போது
உறவும் நட்பும்
கூட இருந்து தோள் கொடுக்க வேண்டும்
என மனிதனுக்கு
செய்தி சொலகிறதா
தன் இனத்தின் இறப்பின் சோகத்தில்
கூட்டமாய் காக்கைகள் கூடி...

## பிடிக்கும்

தோற்றலின் போது
பிறர் மீது பழி சொல்ல

வெற்றியின் போது
ஆர்பாட்டம் செய்ய

பிறர் பிரச்சனை என்றால்
மூக்கை நுழைக்க

தன் பிரச்சனை என்றால்
மூடி மறைக்க

சோகதத்தின் போது
தத்துவங்கள் சொல்ல

மகிழ்ச்சியின் போது
அறிவுரை சொல்ல

எல்லோருக்கும்
பிடிக்கும்..

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை



# மருந்து

பாவகை :
*வெள்ளொத் தாழிசை
(வெண்டாழிசை)*

உடலுக்குத் தேனே உயர்வென ஆகும்
இடத்திலே எங்கும் இயல்புகள் மாறும்
உடலில் உயிரை உணர்.

உயிருக்குத் தேனே உயர்வென ஆகும்
உயிரினை என்றும் உயர்வெனக் காக்கும்
பயிற்சியே வெற்றிப் பயிர்.

உலகிற்குத் தேனே உயர்வென ஆகும்
இலவத்தின் பஞ்சில் இயல்பாய் உறக்கம்
நலத்திற்குத் தேனே நன்று.

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை),
துபாய்.



---

# பசுந்தடம் விரிந்தே பல்லுயிர் பெருகிட

விசும்பிடும் வானத்தூறலின் வழியே
கசிந்திடும் மண்ணின் கனவுகள் நிறைய
பசித்திடும் பொழுதெலாம் புசித்திட
நீண்டு
வசிப்பிடமென்றே வனத்தை
வளர்த்திடும்
பிள்ளைகளின் கால்களில் பிறந்திடும்
உயிர்கள்.
எல்லையற்ற இருளின் போர்வைக்குள்
தொல்லையில்லா காற்றை நிரப்பியபடி
காடெங்கும் நகர்ந்திடும் உயிர்வளி
வயிற்றை நிரப்பியே வாழ்வைத் தள்ளும்
வஞ்சகனுக்கும்
பயிரை நிரப்பியே உயிரைக் காத்திடும்
பாட்டாளி உழவனுக்கும்
பந்தியும் வைத்து பட்டினியும்
போட்டிடும் காலத்தின் கணக்கில்
ஏந்திடும் கரத்தில் கனியைக் கொடுத்து
இசையெனும் சொர்க்கத்தில்
இளைப்பாற்றிடும் மரத்தின்
கிளையெனப் பிறந்திடவும்
கிள்ளையெனக் கொஞ்சிடவும்
நீண்டிடும் மரங்களின் கால்களுக்கு
மகிழ்வின் பெருக்கில் விழிகள்
நிறைக்கின்றன ஆனந்தக் கண்ணீர்.

## ஆழ்மனத்தின் எண்ணமெல்லாம்

அலையெனவே விரிந்திடலாம்.
அன்பின் நெறி படித்தே
அவசரத்தை தவிர்த்திடலாம்.
அடுத்தவர் மனநிலையை
அவர் வழியில் அறிந்திடலாம்
ஆகாயவெளிதன்னை
அளந்திடவே அவா எழலாம்.
அடுத்தென்ன நிலையெனவும்

அலையாத மனதோடு
அருமையாக உரையாடலாம்.
இதயத்தின் உயிர்த்துடிப்பை
எண்ணிடும் துல்லியத்தில்
ஏக்கத்தை புறம் தள்ளி
இளைக்காத கனவில் நிலைக்கலாம்.
தீவிரத்தின் வாதத்தில்
திடுக்கெனவே நுழையாமல்
ஆதரவாய் மொழி பேசும்
ஆனந்தத்தருணங்களை
அடைந்திடவே எண்ணிடலாம்.
மன உறக்கம் தொடராமல்
தினமெல்லாம் உழைப்பேற்றி
சோம்பலை வேரறுக்கும்
திருமந்திரம் ஒதிட உணரலாம்.
பிழைப்பாகப் பார்க்கா வாழ்வை
பிறர் நலம் பேணும் சிறப்பாக
மாற்றிடவே
பணத்தின் பின்னால் ஒடா துணிவில்
பயணம் செல்லும் நபராக
நிலைத்திடலாம்.
நிலையாமை நிலைபெறும் நகர்வினிலே
நித்தமும் சச்சரவைத் தேடும்
அழுக்காற்றைக் கழுவிடவே
அவகாசம் பிறந்திடலாம்.
பொய்யிலும் புரட்டிலும்
உழன்றிடும்
அனுதினப்பாட்டைத்தாண்டி
வாய்மையின் வெளிச்சத்தில்
வாழ்வையே வரமாக்கலாம்.
கருவிகள் காட்டிய குழியில்
கண்மூடிப் புதைந்திடவே
பெருகிவரும் சந்தர்ப்பங்களில்
அறிவியலைத் தாண்டிய அகத்தோடு
அளவளாவி
அடையலாம் நிம்மதியை.

## இல்லறத்தின் நுழைவாயிலுக்கு

இதயங்களின் இணைப்பைப் பாருங்கள்.
காகிதமாகப் போகும் பணத்தின்
வலைக்குள்
தலையைக் கொடுத்தபின்னே
தன்மானம் தொலையும்.
தனக்கான மரியாதையும் தொலையும்.
சமூகத்தின் பார்வைக்குள்
தீண்டாதவனாகிவிடும்
அபாயமும் நேரலாம்.
மனதைக் கொண்டு மகிழ்வைப்
பிரசவிக்க
மனை தாண்டி இரண்டாம்
பிறப்பெடுத்தே
உனை நாடிவரும் பெண்ணுக்கான
விடுதலையை பணத்தில்
கட்டிப்போடும்
கயவாளித்தனம் கவலையளிக்கிறது.
தம்முள் கிடக்கும்
இன்னோர் உலகத்தை
இல்லத்தில் பரிசளிக்கும்
இல்லாளின் இன்பத்திற்கு
அன்பை வழங்கிட
இணைந்திடும் பந்தமே
திருமணமென்றிடின்
வரும்படியின் பின்னே
வாடிடும் ஏக்கங்கள் வாடப்
போவதில்லை.

## மணல் பறித்து ஊற்றெடுக்கும் சுவை நீராய்

கார்முகில்கள் சூழ்ந்தாலும் காட்சியும்
கவனமும்

சிதைக்காமல்
நீல வானத்தை மேடையாக்கி
நகரும் பிரசங்கியாய்
நாளும் நடமாடும் கதிரோனாய்
வெளிச்சத்தை அறியாது போயினும்
வளரும் நுனியின் வாழ்வை
காணாது போயினும்
உயிரைக் கடத்தி
வானையே முட்டவைக்கும்
மரத்தைப் பிரசவிக்கும்
வேரின் மௌனமாய்
கூட்டுக்குள் தன்னைப் புதைத்து
தாங்கிடும் அடியெலாம் தாண்டி
வசீகரிக்கும் கலைக்குள் ஒளிரும்
தங்கத்தின் புன்னகையென
ஒளித்தாலும் அழித்தாலும்
உணராமல் தடுத்தாலும்
ஒருபோதும் மறைவதில்லை
உண்மையின் உரைகல்.

—

இளையவன் சிவா,
கைபேசி: *9965359130*



---

# அம்மாவின் காது வளையம்

அம்மாவின் பதின்மத்தில்
அம்மாவிற்காகவே
காப்பித் தூளு வித்தக் காசில்
பார்த்துப் பார்த்துப் பாட்டன்
வாங்குனது
அந்த அரைப் பவுனுக்
காது வளையம்

கஞ்சிக்கு வழியில்லாம
காஞ்ச போதும்
அடகுக் கடைப் பெட்டிக்குள்
அடைபட்டதில்லை
அந்தத் தோடு மட்டும்

பளபளத்தக் காது வளையம்
பத்திரமாவே அவள்
காது ஒட்டையில் ஆடியது

சலவைச் செய்த
சிக்கரிப் பையே
அம்மாவுக்கும் மாமாவுக்கும்
பள்ளிச் சீருடையாய் மாறியது

கண்ணாலம் ஆன பின்னும்
காது வளையம் கழட்டல
எத்தனைக் கஷ்டத்திலும்
அதை அப்பாவும் கேக்கல

அம்மாவின் காதோடு
எப்போதும் ஆடிய அந்தக்
கம்பீரத்தை இறக்கி வைத்த
இறுமாப்பெல்லாம்
நரையேறிப் போன கருங்கூந்தலுக்கே

மணம் மாறாமல், உருமாறாமல்
அது இருக்க வேண்டி
மருமகளைக் கடந்து

காது வளையத்தை
இடம் மாற்றினாள்
மகளாகிய என் கைகளுக்கு

அம்மாவின் பழையக்
காது வளையத்தைப் புதுசாய்ப்
போட்டுக் கண்ணாடிப் பாக்குறேன்

பின்னாடி நின்னு கண்ணாடில
ரசிச்சு ரசிச்சு பாக்குறாரு அப்பா

என்னில் அம்மாவின் உருவச் சாயல்

—

பி. ஹேமா,
முசிறி.
அலைப்பேசி: 7845843650

---

# குட்டி தேவதையின் வானவில்

வான் தூறல்
நுண்துளிகளில்
பிரமாண்டமாய் உருவான
வானவில் வளையலை
பூமி அணிந்திருந்தது
தூறல் நிறுத்தத்திலும்
துலங்கி குலுங்கி
சிரித்தது வளையல்

முற்றத்தில் நின்று
அதைக்கண்ணுற்ற மகளின்
கொண்டாட்டத்தில்
அவள்
முகத்துக்கு இடமாறியிருந்தது வானவில்

சுவரில் கிறுக்கிய வண்ண வில்
ஆகாயம் சென்றது எப்போது
என்று எனைக்
கேள்விக்குட்படுத்தியவளின்

முக வானவில்
வினாக்குறி
ஆகிறது சற்று நேரத்தில்

இரவோடிரவாக வான்தேவதைகள்
குட்டிதேவதை கிறுக்கிய வானவில்லை
சிரமப்பட்டுத்
தூக்கிச் சென்றதாய்
பதிலிறுக்கிறேன்

வினாக்குறி மீண்டும்
மினுங்கி வானவில்
வடிவம் பெற
குட்டி தேவதை
கைதட்டியபடி
துள்ளிக் குதிக்கிறாள்

இன்னும் கொஞ்சம் கூடுதல்
வேகத்தோடு பூமிக்கைகளில்
குலுங்குகிறது வானவில்

## சொல்லப்படாமல்...

செய்திகள் எத்தனையோ

இருக்கின்றன உலகில்..
செய்திகளே உலகைச்
சூழ்ந்து சுழல்கின்றன

மனிதர்களிடம் எண்ணிக்கை
இல்லாதளவு செய்திகள்
மனிதரல்லா யாவும்
மொழிகின்றன செய்திகள்

மனிதர்களின் செய்திகளில்
பெரும்பாலானவற்றின்
உண்மைத்தன்மை பற்றி
சொல்லவே வேண்டாம்
அது பூச்சியம்தான்

உண்மைத்தன்மையோடுள்ள
உண்மைகள்
புலப்படும் முன்னரே,
நிரூபிக்கப்படும் முன்னரே
உலர்ந்து மறைந்து விடுகின்றன

ஒரு சிலதான் தப்பிப் பிழைத்து
தனித்துவம் பெறுகின்றன
தீபோல சுடும் தன்மை கொண்டன

நான்கு சுவரை நம்ப முடியாத
நிலை,
செய்தியுரைக்க அச்சமே..
காக்க முடிந்த சுவர்களுக்கு காதுகள்
கொடுத்ததார்?

வதந்தி என்றும்
வருணனை என்றும்
விமர்சனம் என்றும்
விதந்துரை என்றும்
வகை வகையாய்ப் பெயர்கள்
செய்திக்கு

சொற்பொழிவிலும்
சொற்களற்ற மௌனத்திலும்
செயற்பாடுகளிலும்
சிற்றுணர்வுகளிலும்
வெளிப்படுகின்றன செய்திகள்

ஆனால்...
எங்கும் எதிலும்
செய்திகள் இல்லையெனில்,
அங்கு சொல்லப்படாமல் இருக்கிறது
ஒரு செய்தி!

## நேசாந்திரி...

துயரம் நிரம்பிய கோப்பையில்
கண்ணீர் சேர்ப்பதற்கு
வழியின்றி தவிக்கிறேன்
நேசத்தாழி உடைந்து வழிந்தோடி
இல்லாமலான சந்தோசத்தில்,
நாமென்ன இல்லாது போய்
விட்டோமா?

ஆற்றங்கரை ஆல் விழுதில்
எதிரொலிக்கும் கீச்சிடல்கள் என்
இறைஞ்சுதலின் பாடல்களோடு
சேர்ந்த ஓலமாகின்றன
ஞாபகத்தீக்குள்ளான யாகமென
தொடராகும் இப்பயணம்
தரிசனத்திற்கென

இன்னும் அந்தக் காலத்தில்தான்
என்னான்மா
பிறிதொரு கணம்

புன்னகையம்சத்தில் அவிழ்ந்து
மணம் பரப்பிய கனவு தேசத்தில்
நேசாந்திரியானேன்

உன் சிலும்பிய கூந்தல்
இரவை மறைத்துக் கிடக்கும் ஒளியில்
நுதல் பிறையில் விரல் பதித்த
ஆகிருதியில்
பரிதவிப்பின் நேரம்
உறைந்து கிடக்கும்

நேசத்தின் ஆவல் கங்கையாய்
கடலாய் பெருக்கெடுக்க
அதை காண்பிக்கும் வழியில்லாது
அடைபட்ட
பிரவாகம் தலையமிழ்த்த
துயரம் தூக்கிட்டுக் கொண்டது

காலங்கடந்தாயிற்று
வலித்தவையின் தித்திப்பில்
கீறல் ஒய்ந்த வடு மேடாகிறது

மேலாடி மலையாகிறது
இரக்கமும் ஏக்கமும் கொண்டு
அரிந்து துண்டங்களான வானத்தை
பார்ப்பது போலான கூண்டுக்கிளி நான்

செத்துப்போனதற்கு நீர் தெளிக்கும்
பிறழ்வின் பிறவி நூதனங்களோடு
பொய்யின் வழிபாட்டை
பிழையினும் பிழையாக
ஓதிக் கொண்டிருக்கிறேன்
மெய்யிலும் மெய்யாக
நம்பிக் கொள்ள.

— *Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர், இலங்கை.



# பகலின் தொடர் பரப்புரையில்...

என்னில்
சிறுகச்சிறுக நுழையும்
நீங்கள் நானாகிக்
கொண்டிருக்கிறீர்கள்.

எனக்குப் பாதுகாப்பு
கொடுப்பதை பிறகு
பார்க்கலாம்.
முதலில்
என் கனவுகளுக்கு
விடுதலைக் கொடுங்கள்.

சந்தி முதல்
அந்தி வரையிலான
பகலின்
தொடர் பிரச்சாரத்தில்
இரவுக்கு வேலையில்லை.

## என்னில் நுழைய
நீங்கள் தயங்குகிறீர்கள்.
நுழைந்ததும் தெரியவரும்
உங்களை விட
நான் மேலானவன்.

## இதுநாள் வரையிலும்
உன்னைக் காணாதவன்
புலம்பிக் கொண்டு இருக்கிறான்.
பெண்ணின் விழிகள்
ஊமை விழிகளென்று...!

## உன் மோகப் பார்வை
என்னைத் தாக்கும்
பொழுதுகளில்....
கூடிப் போகிறது
என்னுள் காதலும் காமமும்.

## தரம் தெரியாதவன்
வாங்கிய பொருளுக்கு
அவன் கொடுத்த விலை
மிக அதிகம்.

## விழியும் மொழியும்
ஒன்றாய் பேச; கூடி நின்றது
இயலும் இசையும்.

## பழி தீர்க்கும்
படலத்தை நிறுத்து.
தீட்டத் தீட்டச் சாணையில்
கரைந்து காணாமல் போகலாம்
கத்தி.

## அணைந்த சுடரில்
தன் விலாசம் தேடி தோற்கிறது
விளக்கு...!

## எண்களுக்கு
இடத்தில் விழுந்தால்
பலம் கூடுவதும்;
வலத்தில் சேர்ந்ததால்
பயனற்றுப் போவதும்;
புதிரிலும் ஒரு புரியாதபுதிர்
பூஜ்ஜியம்.

## உடல்
படுக்கையில் புரள்கிறது
மனத்தின் வலி.

## சொல்லும் உண்மையை
ஏற்காத போது;
குற்றமற்றவனென நிரூபிக்க
ஒரு பொய் தேவைப்பட்டால்
அதைச் சொல்வதில்
தவறில்லை.

## வாசலில்
வரவேற்று நின்றது;
பின்பு கதவாகி நிற்கிறது
மரம்.

## இந்தத் தூக்கம்
நிரந்தரமானதில்லை
எப்போதும் போல்
என்னை எழுப்பிடு.

சொற்களால்

என்னை அடுக்கி வைக்கிறேன்.
முன்னறிவிப்பின்றி வரும்
பூகம்பம் போல்; கலைத்து
நிலைகுலைய செய்கிறாய்
என்னை.
/

பஞ்சம் பிழைக்க
வெகுதூரம் போன பறவை
மெலிந்திருக்கிறது.
இங்கேயே இருந்திருக்கலாம்.
/

அந்தவொரு
துளியில் தான்; நானும்
நீயும் அடுத்தும்
/

நீ எங்கிருந்தாலும்
உன்னை விரைவில்
வந்தடையும்
தூரத்தில் இருக்கிறது
என் ம(வ)னம்.
/

தோட்டத்தில்
பூக்களைப் பறிக்கும்
உனக்கு
நகங்கள் வலிக்கிறது.
எனக்கு
இதயம் வலிக்கிறது.



—
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி; 9443139353

# வெளிச்சமே விளைச்சல்

மனித மனம் ஓர் அதல பாதாள அரூபம். மாயத்தின் வலையை வீசிக் கொண்டே இருப்பதில் இருக்கும் அதன் பிளிறல் பயங்கரமானது. அது தன்னையே முன்னிறுத்தி தன்னையே தள்ளி விட்டுக் கொள்ளும் அடிப்படைவாதத்தின் அச்சாணி. மாற்றி யோசிக்க விடாத மகத்துவம் அதன் மடியில் மாபெரும் மறைகனமாக இருக்கிறது. அவன் வெற்றி பெற்றான் என்றே பேசும் அதன் பொருளுக்கு... தான் தோல்வி அடைந்து விட்டதைப் பொருத்தி பார்க்காது. மற்றவர் மீது கை காட்டும் சுலபத்தை எப்போதும் சூடிக் கொண்டிருக்கும் சுய கிரீடம் அது. அவன் வெற்றி மீது இருக்கும் கவனம் தன் தோல்வி மீது திரும்பாதது தர்க்கத்துக்கு வரிந்து கட்டிக்கொண்டு வரும் சுய திருப்தியே தவிர வேறென்ன.

இந்த உலகம் மோசமானது என்று சொல்வது அபத்தமாக இருக்கிறது. அந்த மோசமான உலகத்தில் இருந்துதானே உங்கள் தாயும் தந்தையும் வந்தார்கள். உங்கள் பிள்ளைகள் வந்தார்கள். உங்கள் இதயத்துக்கு நெருக்கமானவர்கள் வந்தார்கள். பிறகெப்படி இது

மோசமான உலகமாக இருக்க முடியும். எதிர்மறை எண்ணங்களில் இருப்போருக்கு நிழலும் பூதமாக மாறும். நேர்மறை எண்ணங்களில் இருப்போருக்கு பூதம் கூட பொம்மையாக மாறும். நல்லவர்கள் மத்தியில் கெட்டவர்கள் இருப்பது போல கெட்டவர்கள் மத்தியில் நல்லவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். தேர்ந்தெடுப்பதில் இருக்கிறது தேவை எது தேவையற்றது எது என்பது.

நல்ல வழியைத் தேர்ந்தெடுக்க தவறுவதும்... நல்ல மனிதர்களை கண்டடையத் தவறுவதும் நம் குறைபாடு. உலகம் என்ன செய்யும். கொலை செய்ய முயற்சிப்பவன் மத்தியில்தான் அதற்கு பலி ஆகக் கிடந்தவனை காப்பாற்றும் மனிதனும் இருக்கிறான். மிக சுலபமானது... தெரியாது என்று கண்களை மூடிக்கொள்வது. மிக தேவையானது... தெரிந்து கொள்ள வேண்டியதை தெரிந்து கொள்ள அகக் கண்களையும் திறந்திருப்பது. எங்கு செல்கிறோம் என்பது எப்படி முக்கியமோ... எந்த வழியில் செல்கிறோம் என்பதும் முக்கியம். வழிநெடுக எறும்புகளை மிதித்து விட்டு கோயில் சென்று முதல் ஆளாக நிற்பதில் என்ன பிரயோஜனம்.

எல்லாரும் என்னை ஏமாற்றுகிறார்கள் என்பது வெற்றுக் குற்றச்சாற்று. நான் எல்லாரிடமும் ஏமாந்து கொண்டிருக்கிறேன் என்பதே உகந்த உற்றச் சாற்று. தெளிவு நம்மிடம் இல்லாத போது மற்றவர் பானையில் கள்தாம் நாம். தன்னை சரி செய்து கொள்ள சுய பரிசோதனை அவசியம். தன்னை உருவாக்கிக் கொள்ள சுய கழிவிரக்கம் உதவாது. சுய சுத்திகரிப்பே சுயத்தை தக்க வைக்கும். எல்லா பழிகளையும் எதிராகவே சுமத்திக் கொண்டிருந்தால்... புதிர் போல தெரியலாம். அதில் புளகாங்கிதமும் அடையலாம். ஆனால் புத்தி மட்டுதான் மிச்சம்.

என் வாழ்வில் நடக்கும் எல்லா நிகழ்வுக்கும் முழுமுதற் பொறுப்பு நானாகத்தானே இருக்க முடியும். (விபத்து போன்ற விதிவிலக்கு சம்பவங்கள் தனி). என் பயணம் என் பார்வை என் நோக்கம் என் தீர்க்கம் என் தேவை என் சுயம் என் பலம் என்று என் சார்ந்த எல்லாவற்றுக்கும் யாரோ ஒருவரின் சாவிக்கொத்து தான் காரணம் என்பதெல்லாம் பரிதாபத்துக்குரியது. துக்கத்தை பூசிக்கொண்டு எப்போதும் சோர்வு கொண்டிருப்பது ஒரு வகை போதை. அடிமை மனோபாவத்தில் கிடைக்கும் சோம்பேறித்தனம் தூக்கத்துக்கு வழி வகுக்கலாம். விழிப்பு நிலைக்கு உதவாது.

உங்கள் தோல்வி உங்களிடம் இருந்தே கிளம்பி உங்களிடம் வந்து சேர்கிறது என்ற உண்மை புரியாதவரை... கிடைக்கும் சிற்சில வெற்றிக்கு கூட நீங்கள் உரிமை கொண்டாட முடியாது. உங்கள் சம்மதம் இன்றி உங்கள் மனதை ஒருவர் தாக்கவோ தகர்க்கவோ முடியாது. அவர்கள் பேசுவதை உள்வாங்கி அவர்களுக்கு இடம் தருகிறோம் என்பதை உணராத போதுதான்.... நான் நம்பினேன்.... அவுங்க ஏமாத்திட்டாங்க என்ற புலம்பல் இருக்கும். ஒருவர் ஏமாற்றுவதை சுலபமாக ஏற்றுக்கொள்ளும் வலுவில்லாத மனம் உங்களுடையது என்ற உண்மையை எப்போது புரிந்து கொள்வீர்கள்.

குறைகளை விட்டொழிந்தால்.. நிறைய கிடைக்குமா என்றெல்லாம் தெரியாது... ஆனால் நிறை கிடைக்கும். உள்ளே நிறைந்து பாருங்கள். வெளியே குறைந்து போக மாட்டீர்கள். உலகம் சிறை என்ற தத்துவத்தில் தத்து பித்து தவழும். உள்ளத்தில் சிறை இல்லை என்ற சித்துவம் ஒருபோதும் வெற்றாகாது. பழைய அவமானங்களில் தேங்கி விட்டால் புதிய சாதனைகள் எப்படி வரும். வேண்டாததை மறக்க கற்றுக் கொள்ள வேண்டும். இதய சுத்திகரிப்பு அது. பிழை இருந்தால் திருத்திக் கொள்ளலாம். ஒரு பிழையை சரி செய்ய இன்னொரு பிழை ஒருபோதும் உதவாது.

வீட்டுக்கு செஞ்சேன்... குடும்பத்துக்கு செஞ்சேன் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது பால்வாடி அறிவு. நான் செய்யாம யார் செய்வா என்று கேளுங்கள். பலமான நம்பிக்கை. கஷ்டப்பட்டு பெத்து வளர்த்து ஆளாக்கி என்று பிள்ளைகளிடம் சொல்லாதீர்கள். பரிதாபமாக பார்ப்பார்கள். விருப்பப்பட்டு பெத்து வளர்த்து ஆளாக்கி என்று சொல்லுங்கள். பிள்ளைகள் கேட்பார்கள்.

சக மனிதன் இல்லாமல் இங்கே எதுவுமே சாத்தியம் இல்லை. தனிமையில் இருக்கிறேன் என்பதெல்லாம் சொல்லிக்கொள்ள ஜோராக இருக்கும். அடர் வனத்துக்குள் மனித வாசத்துக்கு அல்லாடிப் பாருங்கள் அப்போது புரியும். சக மனிதன் என்பவனே வாழ்வின் அடித்தளம். நம்மைச் சேரும் எல்லா பொருளும் இன்னொருவன் கை பட்டது. சுவாசம் பட்டது. பிறகெப்படி மனிதர்கள் இல்லாத பூமி வேண்டும் என்று மனசாட்சியே இல்லாமல் கேட்கும் மனம். தனித்தீவில் மாட்டிக்கொண்ட கதைகள் அறிவோம். விண்வெளியில் மாட்டிக்கொண்ட கதைகள் அறிவோம். உதவ இன்னொரு மனிதனே இருக்கிறான். மனிதனைப் பகைத்துக் கொண்டு மானுடம் தழைக்கவே முடியாது. குற்றம் பார்த்துக்கொண்டே இருந்தால் சுற்றம் இருக்காது. குறைகளை மேய்ந்து கொண்டே இருந்தால் பசி அடங்காது.

மனிதர்களை விட்டு ஒதுங்கி இருப்பதல்ல தனிமை. தன்னை நோக்கி தன்னை குவித்திருப்பது. அவ்வப்போது தன்னிடம் இருந்தும் தள்ளி இருப்பது அவசியம் தான். ரீ சார்ஜ் செய்து கொள்வது போல. மற்றபடி அலைபேசி உள்ளங்கையில் தான் உயிர்ப்போடு இருக்கும். உலகின் கடைசி மனிதன் என்ன செய்வான். சீக்கிரம் செத்து போவான். ஆக... மனிதனோடு மனிதனாக இருங்கள். மனிதனோடு மகாராஜாவாக இருத்தல் மடமை. எனக்கு துரோகம் செய்து விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டே இருப்பது கூட ஒருவகை கவன ஈர்ப்பு தான். சுய புத்தியோடு இருப்பவர்களை யாரும் ஏமாற்ற முடியாது. சுயம்பு என்று பித்தேறிக் கொண்டவர்களை யார் வேண்டுமானாலும் ஏமாற்றலாம்.

உங்கள் அனுமதி இல்லாமல் ஒரு நாய்கூட உங்களைக் கடிக்க முடியாது என்கிறது ஆராய்ச்சி. சும்மா படுத்திருக்கும் நாயை... நாய் கடிச்சுடுமோ நாய் கடிச்சிடுமோ என்று நினைத்து நினைத்து அந்த நினைப்பின் வாசத்தை நாய் உணர்ந்து இவன் பலகீனமானவன்

என்று புரிந்து உடனே கடிக்க வருகிறது. ஆக... பலமானவர்களை யார் ஏமாற்றினாலும்.. ஏமாற்றம் ஏமாற்றியவர்களுக்கு தான். என் காரண காரியங்களுக்கு நானே ஆதி என்ற புரிதல் வரும் நாளில்... உங்களை நீங்களேகூட ஏமாற்ற முடியாது. கண்ணாடி பிம்பங்களில் காணாமல் போகும் கூட்டத்தில் இருந்து மெல்ல வெளியேறி விடுவீர்கள். வெற்றுப் புகழுக்கும்... வெட்டி மேடைக்கும் காத்திருக்கும் அறிவில் காலம் கூடு கட்டாது. மாலைக்கு அலையும் கழுத்தும் மண்ணுக்கே சொந்தம் என்ற புரிதல் வந்து விட்டால் வாழும் போதே மரமாக நின்று விடலாம்.

திருப்தியின்மையே திரும்பத் திரும்ப தன்னைப் பிராண்ட காரணமாக இருக்கிறது. திருப்தி உள்ளிருந்து எழ வேண்டும்... வெளியே தேடினால் வெற்றிடமே மிஞ்சும். திருப்தி பட்டுப் பாருங்கள். பிறகு திறவுகள் உங்களிடம். மற்றவர் ஒதுக்குதல் பற்றி ஒன்றும் இல்லை. மற்றவரை ஒதுக்குதல் பற்றியும் ஒன்றுமே இல்லை. இருப்பது இருக்க... நகர்வது நகர... இதயங்களில் சுமை ஏறாத வரை இசை வந்து சேரும் இன்முகத்தில். தனக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவாய் இருந்தால்... வேண்டாதது எல்லாம் விலகி விடும். மற்றபடி வேட்கை குறையாத நாளில் நன்றாகவே வாழ்கிறீர்கள் என்று அர்த்தம்.

திருப்தியின்மையே கோபமாகவும் இயலாமையாகவும் சுய கழிவிரக்கமாகவும் மாறி இம்சிக்கிறது என்ற உண்மையைப் புரிய... சற்றே அமருங்கள். அமைதியாக உங்களை நீங்களே கேள்வி கேளுங்கள். உள்நோக்கி கடப்பது நன்றாக நடந்தால்.. நீங்களும் கடவுளாகி விடுவீர்கள். பிரார்த்தனையை கை விட்டு பெரும் அமைதியை ஏற்றுக் கொள்ளுங்கள். கடவுளிடம் பிரார்த்தனை செய்வது போல ஒரு மட்டம் செய்யும் செயல் கடவுளுக்கு உண்டோ.

தொடர் புரிதலை தொலைதல் கொடுக்காது. கண்டெடுப்பதே தரும். இருட்டில் இருப்பதே வெளிச்சம் வேண்டும் என்பதால் தான். இருட்டு சுகமாகவே இருக்கும். வெளிச்சமே விளைச்சல் தரும். மேலும் இருட்டென்பதே கொஞ்சம் வெளிச்சம் என்றானே பாரதி. ஒளி படைத்த கண்களே உற்று நோக்கும். இருள் சூழ்ந்த கண்கள் தடுமாறும். பித்து நிலையில் காண்பதெல்லாம் ஒரு கட்டம் வரையே. அதற்கு அப்பால் தொடுவானம் தொடர வேண்டுமானால் புத்தி தெளிவாக வேண்டும். அறிவு ஞானமாகும் போது மனிதக் கொம்புகள் வெட்டிச்சுமை என்று புரிந்து விடும்.

இன்னொருவர் தர முடியாத நம்மை... நாமே தான் கண்டடைய வேண்டும்.

- கவிஜி

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.